மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதா? எப்போது துவங்கப்பட்டு எப்போது முடிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க் கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) தாம்பரத்தில் ஒரு பள்ளியில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அளிக்கப்படுவதாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு.பி.என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இந்து மேல்நிலைப் பள்ளியில் ஆர். எஸ் எஸ். இயக்கத்தினர் சில நாட்களாக முகாம் இட்டு இருப் பதும், அங்கே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கு பயிற்சி அளிக் கப்பட்டு வருவதும் அரசுக்குத் தெரியுமா? இதன் மீது அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த செய்தியை நான் பத்திரிகையில் பார்த்தேன். அது போன்ற பயிற்சிகள் பள்ளிகளில் நடத்து வதற்கும், அரசுக்குரிய இடங்களில் நடத்துவதற்கும் அனுமதி இல்லைஎன்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதைப்பற்றி அரசின் சார்பில் உடனடியாக விசாரிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளின் காரணமாக அமைதிக்குப் பங்கம் வருவதை இந்த அரசு எந்த நேரத்திலும் தடுத்து நிறுத்தும்.